புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 91 | 06-10-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 02 | Issue: 91 | 06-10-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## சவால்களை எதிர்கொள்ள உலகளாவிய அமைப்புகளில் சீர்திருத்தங்கள் அவசியம் : பிரதமர் மோடி



டெல்லி: அக்.6–

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சுவிஸ் அதிபர் கை பார்மெலின் ஆகியோர் முன்னிலையில்,இன்று இந்தியாவும் சுவிஸ் கூட்டமைப்பும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டன. பின்னர் இந்த நிகழ்வில் பேசிய பிரதமர் மோடி, இந்தியாவும் சுவிட்சர்லாந்தும் ஜனநாயக விழுமியங்கள், சட்டத்தின் ஆட்சி, பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்தில் பொதுவான நோக்கங்கள் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை கொண்டுள்ளன. உலகளாவிய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு இது மிக முக்கியம் என்று குறிப்பிட்டுள்ளார். இந்திய பொருளாதாரம்

உக்ரைன் அல்லது மேற்கு ஆசியா என எங்குப் பிரச்சினை என்றாலும், அமைதிக்கான ஒவ்வொரு அர்த்தமுள்ள முயற்சிக்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று பிரதமர் மோடி மீண்டும் உறுதிப்படுத்தினார். EFTA நாடுகளுடன் கையெழுத்திடப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக மற்றும் பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தத்தை (TEPA) இரு நாட்டு தலைவர்களுமே இந்த நிகழ்வில் சுட்டிக்காட்டினர். இது அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 100 பில்லியன் டாலர் முதலீடு மற்றும் 10 லட்சம் நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை இலக்காக கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

சுவிஸ் அதிபர் கை பார்மெலினுடனான கூட்டறிக்கையின் போது பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது: “இந்தியா சுவிட்சர்லாந்து இடையிலான நட்பு பல நூற்றாண்டுகள் பழமையானது... புத்தாக்கம், உள்கட்டமைப்பு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் ஆகியவை இன்று நமது உறவின் வலுவான தூண்களாகத் திகழ்கின்றன.

சுவிட்சர்லாந்திற்கான இந்தியாவின் ஏற்றுமதிக்குச் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு நடைமுறைகளை மேலும் எளிதாக்கவும் நாங்கள் பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளோம். இதன் மூலம், சுவிட்சர்லாந்திற்கு மேற்கொள்ளப்படும் இந்தியாவின் விவசாயம், மருந்துகள், ஜவுளி மற்றும் பொறியியல் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்கும்; அத்துடன் வங்கி, காப்பீடு, உணவு பதப்படுத்துதல் மற்றும் நிலைத்தன்மை (sustainab ility) போன்ற முக்கியத் துறைகளில் புதிய சுவிஸ் முதலீடுகளை நாங்கள் ஈர்ப்போம் என்றார்.

குடியேற்றம் மற்றும் இடப்பெயர்வு தொடர்பான கூட்டாண்மை ஒப்பந்தம் மற்றும் இளம் தொழில்முறை நிபுணர்களுக்கான ஒப்பந்தம் ஆகியவற்றின் மூலம், சுவிட்சர்லாந்தில் இந்திய மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முறை நிபுணர்கள் மற்றும் இளைஞர்களுக்குப் பல புதிய வாய்ப்புகள் உருவாக உள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் உலகளாவிய அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது சவால்களை எதிர்கொள்ள அவசியமானது என்று இந்தியாவும், சுவிட்சர்லாந்தும் ஒருசேர கருதுவதாகப் பிரதமர் மோடி கூறினார்.

# மதுராந்தகம், தாராபுரத்தில் இன்று வாக்குப் பதிவு

## அக்.9ம் தேதி முடிவுகள் வெளியாகும்; பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

சென்னை: அக்.6

இடைத்தேர்தல் நடைபெற உள்ள மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில், நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் பிரச்சாரம் முடிந்தது. இன்று செவ்வாய்க்கிழமை வாக்குப் பதிவு நடைபெறுகிறது. இதை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் தவெக தலைவர் விஜய் போட்டியிட்டார். அவர் 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றார். அதன்பின், முதல்வர் பதவி ஏற்ற விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார்.

சி.விஜய பாஸ்கர் (விராலிமலை), எம்.ஆர்.விஜய பாஸ்கர் (கரூர்), மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்திய பாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகிய 6 அதிமுக எம்எல்ஏக்கள், பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆளும் தவெகவில் இணைந்தனர். இதையடுத்து, அந்த 7 தொகுதிகளும் காலியானதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.

திருச்சி கிழக்கு, விராலிமலை, கரூர், பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகள் தொடர்பான தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ளது. அதனால், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பைக் கடந்த செப்டம்பர் 7ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதையடுத்து மதுராந்தகம் தொகுதியில் தவெக சார்பில் மரகதம் குமரவேல், திமுக சார்பில் பரந்தாமன், அதிமுக சார்பில் கணிதா சம்பத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் சுகந்தி, நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன், சுயேச்சை வேட்பாளர்கள் என 28 பேர் களத்தில் உள்ளனர்.

அதேபோல், தாராபுரம் தொகுதியில் தவெக சார்பில் சத்யபாமா, திமுக சார்பில் சுகன்யா,அதிமுக சார்பில் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லட்சுமணன், நாதக சார்பில் கார்த்திகா உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர். தவெக அரசுக்கு ஆதரவு அளித்து வரும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தனித்து போட்டியிடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மதுராந்தகம் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், தாராபுரம் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

எனவே, இந்த இடைத்தேர்தலில் 5 முனைப் போட்டி நிலவுகிறது. ஆளும் கட்சியான தவெக. எதிர்க்கட்சியான திமுக மற்றும் அதிமுக, நாதக, கம்யூனிஸ்ட் என அனைத்து கட்சிகளும் இரு தொகுதிகளிலும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டன. தவெக வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் விஜய் செப்.25ம் தேதி மதுராந்தகம் தொகுதியிலும் செப்.30ம் தேதி தாராபுரம் தொகுதியிலும் பிரச்சாரம் செய்தார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடந்த 2ம் தேதி தாராபுரம் தொகுதியிலும் 3ம் தேதி மதுராந்தகம் தொகுதியிலும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அதேபோல், திமுக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், செப்.27ம் தேதி மதுராந்தகம் தொகுதியிலும், கடந்த 3ம் தேதி தாராபுரம் தொகுதியிலும் திமுக வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்தார்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கடந்த 2ம் தேதி தாராபுரம் தொகுதியிலும், 3ம் தேதி மதுரந்தகம் தொகுதியிலும் பிரச்சாரம் செய்தார். அதேபோல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோரும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

ஏற்கெனவே, தாராபுரம் தொகுதியில் பிரச்சாரம் செய்த முதல்வர் விஜய் நேற்று மீண்டும் அத்தொகுதியில் சாலை வலம் (ரோடு ஷோ) சென்று இறுதி கட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டார். தேர்தல் விதிமுறைகளின்படி வாக்குப்பதிவு தொடங்குவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பாகவே பொதுப் பிரச்சாரங்கள் அனைத்தும் முடிக்கப்பட வேண்டும். அதன்படி, இரு தொகுதிகளிலும் பிரச்சாரம் நேற்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. இடைத்தேர்தலை முன்னிட்டு 2 தொகுதிகளிலும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

அதன்படி,நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் வாக்குப் பதிவு நடைபெறும் நாளான 6ம் தேதி (செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணி வரை பிரச்சாரம், பொதுக்கூட்டம், ஊர்வலம் நடத்த அரசியல் கட்சிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இரு தொகுதிகளிலும் வெளியாட்கள், கட்சி பணியாளர்கள் மற்றும் வாக்காளர் அல்லாதவர்கள் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்குப் பிறகு தொகுதிகளை விட்டு வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள், தங்கும் விடுதிகள், இல்லங்கள் ஆகிய இடங்களில் தங்கியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர். வாக்குப் பதிவு இன்று காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதையொட்டி மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு முடிந்து வாக்குகள் அக்.9ம் தேதி எண்ணப்படுகின்றன.

## ஞானேஷ் குமாரை இடைநீக்கம் செய்ய உச்ச நீதிமன்றம் மறுப்பு: தேர்தல் ஆணையத்துக்கு நோட்டீஸ்

புது டெல்லி: அக்.6–

தலைமைத் தேர்தல் ஆணையத்தில் உள்ள மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் ஒப்புதல் அல்லது ஒருமித்த கருத்து இல்லாமல், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், அவரை இடைநீக்கம் செய்வதற்கான இடைக்கால உத்தரவை பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் ஒப்புதல்இன்றி பலவழிகாட்டுதல்களும், மென்பொருள் மாற்றங்களும் அறிமுகப்படுத் தப்பட்டதாகக் குற்றம் சாட்டி, தலைமைத் தேர்தல் ஆணையரின் தலைமையிலான தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டை எதிர்த்துத் தொடரப்பட்ட பல மனுக்களை உச்ச நீதிமன்றம் விசாரித்து வருகிறது.

தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, மனுவில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு நோட்டீஸ் அனுப்பியது. ஆணையத்தின் பதிலைப் பரிசீலித்த பிறகு, தேவையான ஒருமித்த கருத்து இல்லாமல் தலைமைத் தேர்தல் ஆணையர் எடுத்த முடிவுகளை மறுபரிசீலனை செய்யவோ அல்லது ரத்து செய்யவோ வாய்ப்புள்ளதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனது அதிகாரங்களைப் பயன்படுத்திய விதம் மற்றும் சர்ச்சைக்குரிய ‘படிவம் 6’ மாற்றம் உள்ளிட்டவை குறித்துத் தொடரப்பட்ட வழக்குகளில், சம்பந்தப்பட்ட முடிவுகள் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் திங்களன்று உத்தரவிட்டது.



“ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் போது, படிவம் 6ஐ மாற்றியது யார் என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். ஒருமித்த கருத்து இல்லையெனில், முடிவு பெரும்பான்மை அடிப்படையில் இருக்க வேண்டும்; இல்லையெனில், அந்த முடிவு ரத்து செய்யப்படலாம். நீங்கள் உங்கள் வாதங்களை ஒரு செய்தித்தாள் அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே முன்வைக்கிறீர்கள்” என்று தலைமை நீதிபதி கூறினார்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான விகாஸ் சிங் இதற்குப் பதிலளிக்கையில், “தேர்தல் ஆணையத்திடமிருந்தே ஒரு பத்திரிகை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் இந்த அறிக்கையை மறுக்கவில்லை” என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த தலைமை நீதிபதி, “அந்த அறிக்கை துல்லியமானதாகவோ அல்லது தவறானதாகவோ இருக்கலாம். எனவே அதன் அடிப்படையில் நாங்கள் உத்தரவு பிறப்பிக்க முடியாது. தேர்தல் ஆணையத்தின் பதிலுக்காக நாங்கள் காத்திருக்க வேண்டும்,” என்று கூறினார்.

## உற்பத்தி குறைவால் பட்டாசு விலை 15% வரை உயர்வு: தீபாவளிக்குத் தற்காலிக அனுமதி வழங்கும் பணி தொடக்கம்

சிவகாசி: தீபாவளி பண்டிகைக்காகத் தற்காலிக பட்டாசு கடைகளுக்கு அனுமதி வழங்கும் பணிகள் தொடங்கி உள்ளன. அதே வேளையில் உற்பத்தி குறைவு காரணமாகப் பட்டாசு ஆலைகளில் அடக்க விலை 15 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

சிவகாசி பகுதியில் 1,100க்கும் மேற்பட்ட அனுமதி பெற்ற பட்டாசு ஆலைகள் இயங்கி வருகின்றன. பேரியம் நைட்ரேட் பயன்படுத்தத் தடை, இணைப்பு வெடிகள் உற்பத்தி செய்யத் தடை உள்ளிட்ட கட்டுப்பாடுகளால் 60 சதவீத வகை பட்டாசுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடந்த 2 ஆண்டுகளாகப் பட்டாசு உற்பத்தி குறைந்த போதும், விலை அதிகரிப்பால் ரூ.6,000 கோடி அளவுக்கு தீபாவளி விற்பனை நடந்தது. தமிழகத்தில் விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் ஆண்டு முழுவதும் செயல்படும் நிரந்தர பட்டாசு கடைகளுக்கான உரிமம் வழங்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 2,500க்கும் அதிகமான சில்லறை விற்பனை கடைகளில் ஆடிப் பெருக்கு அன்று பட்டாசு விற்பனை தொடங்கியது. தற்போது தமிழகம் முழுவதும் தீபாவளி விற்பனைக்கான தற்காலிகப் பட்டாசு கடைகளுக்கு அனுமதி வழங்கும் பணி தொடங்கியுள்ளது.

இதனால் வெளிமாவட்ட வியாபாரிகள் மற்றும் பெரு நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கவும், தொழில் துறையினர் வாடிக்கையாளர்களுக்கு வழங்கவும் அன்பளிப்பு பெட்டி (கிஃப்ட் பாக்ஸ்) ரக பட்டாசுகளை ஆர்டர் கொடுக்க சிவகாசியில் குவிந்து வருகின்றனர். இதற்கிடையில், கட்டுப்பாடுகள், மூலப்பொருட்களின் விலையேற்றம் போன்றவற்றால் ஆலைகளில் பட்டாசுக்கான அடக்க விலை 15 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இதனால் சில்லறை கடைகளில் பட்டாசு விலை 20 முதல் 25 சதவீதம் உயர வாய்ப்புள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பட்டாசு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கூறுகையில், “மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பெரும்பாலான பட்டாசு ஆலைகளில் உற்பத்தி நடைபெறவில்லை. இதனால் ஏற்கெனவே ஆர்டர் செய்த பட்டாசுகளைக் கடைகளுக்கு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அடக்க விலை உயர்ந்த நிலையில், லாரி வாடகை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் சில்லறை விற்பனை 25 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. விலை உயர்ந்த போதும், தீபாவளி நெருங்கும் நேரத்தில் மக்கள் விரும்பும் பேன்சி ரகப் பட்டாசுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது” என்றனர்.

## லட்சக்கணக்கான தேர்வர்கள் எதிர்பார்க்கும் குரூப்4 தேர்வு அறிவிப்பு இன்று வெளியாகிறது

சென்னை: அக்.6–

லட்சக்கணக்கான தேர்வர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பு இன்று (6ம் தேதி) வெளியிடப்படுகிறது. இத்தேர்வு மூலம் ஏறத்தாழ 10 ஆயிரம் காலியிடங்கள் நிரப்பப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்கள் டிஎன்பிஎஸ்சி வாயிலாக தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுகிறார்கள். 2026ம் ஆண்டுக்கான டிஎன்பிஎஸ்சி வருடாந்திர தேர்வு அட்டவணையில் இடம்பெற்றுள்ள 6 தேர்வுகளில் 5 தேர்வுகளுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 3 தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

2 தேர்வுகள் விரைவில் நடத்தப்பட உள்ளன. கடைசியாக இடம் பெற்றுள்ள குரூப்4 தேர்வுக்கான அறிவிப்பு அக்.6ம் தேதி வெளியிடப்பட்டு தேர்வு டிச.20ம் தேதி நடைபெறும் எனத் தேர்வு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒருங்கிணைந்த குரூப்4 தேர்வுக்கான அறிவிப்பை டிஎன்பிஎஸ்சி இன்று (6ம் தேதி) இணையதளத்தில் வெளியிடுகிறது. பொதுவாக குரூப்4 தேர்வில், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் (கிரேடு3), கிராம நிர்வாக அலுவலர், வரைவாளர், பில் கலெக்டர், வனக்காவலர் உள்ளிட்ட பதவிகள் இடம் பெறும். கடந்த 2024 குரூப்4 தேர்வில் 4,662 காலியிடங்கள் இடம் பெற்றிருந்தன.

கடந்த 2024ம் ஆண்டு முதல் பல்கலைக்கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், அரசு போக்குவரத்துக் கழகம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் குரூப்சி நிலையிலான பணியிடங்கள் குரூப்4 தேர்வு மூலமாக நிரப்பப்பட்டு வருகின்றன. அதோடு பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சிகளில் உள்ள காலிப்பணியிடங்களும் டிஎன்பிஎஸ்சி மூலம் நிரப்பப்படும் என அண்மையில் அரசாணை வெளியிடப்பட்டது.

எனவே, நகர்ப்புற உள்ளாட்சிகளில் உள்ள குரூப்சி பதவிகளில் அதிக காலியிடங்கள் இருப்பதால் அந்த இடங்களும் குரூப்4 தேர்வின் கீழ் வருவதால் நாளை வெளியிடப்படும் குரூப்4 தேர்வு அறிவிக்கையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எஸ்எஸ்எல்சி தகுதி: குரூப்4 தேர்வை பொருத்தவரையில் பெரும்பாலான பதவிகளுக்கு அடிப்படை கல்வித்தகுதி எஸ்எஸ்எல்சி தேர்ச்சி ஆகும். ஒருசில பதவிகளுக்கு மட்டுமே பட்டப்படிப்பு கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளுக்கு அடிப்படை கல்வித்தகுதியுடன் கூடுதலாக தொழில்நுட்பத் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

குரூப் 4 தேர்வுக்கான அடிப்படை கல்வித்தகுதி 10ம் வகுப்பு என்ற போதிலும் முதுகலை பட்டதாரிகளும், பட்டதாரிகளும்தான் அதிக எண்ணிக்கையில் விண்ணப்பிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த குரூப்4 தேர்வுக்கு 13.89 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். அதில் 11.36 லட்சம் பேர் மட்டுமே தேர்வெழுதினர். இந்த ஆண்டு குரூப்4 தேர்வுக்கு 15 லட்சம் பேர் விண்ணப்பிக்கலாம் என தெரிகிறது.

# வேடங்கிநல்லூர் புதிய பேருந்து நிலையத்தில் வெற்றி பயணத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் ச.கவிதா கொடியசைத்து தொடங்கி வைத்தார்



திருவள்ளூர் அக் 06 :

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் போக்குவரத்து துறை சார்பில் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் வெற்றி பயணம் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், வேடங்கிநல்லூர் பகுதியிலுள்ள புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா வெற்றி பயணத் திட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து, மகளிருக்கு விலையில்லா பயணச்சீட்டியினை வழங்கி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி பயணிகளுடன் பேருந்தில் பயணம் மேற்கொண்டு பேசினார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் திருவள்ளூர் மண்டலத்தில் தினசரி இயக்கப்படும் நகரம் மற்றும் புறநகரப் பேருந்துகள் மொத்தம் 232 பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இதில் ஏற்கனவே மகளிர் பேருந்து நகரத்தடம் 72 இயக்கப்பட்டு வருகிறது. மேலும் அக்டோபர் 02 முதல் கூடுதலாக நகரம் மற்றும் புறநகரப் பேருந்துகள் 62 என மொத்தம் 134 பேருந்துகள் வெற்றிப் பயணமாக திருவள்ளூர் மண்டலத்தில் இயக்கப்படும்.

ஏற்கனவே மகளிர் பேருந்து நகரத்தடம் 72, அக்டோபர் 02 முதல் கூடுதலாக வெற்றி பயணமாக இயக்கப்படும் பேருந்துகள் 62 ஆக மொத்தம் வெற்றி பயணமாக இயக்கப்படும் பேருந்துகள் 134 மீதமுள்ள பேருந்துகள் வெளி மாநில பேருந்துகள் 90, 80 கிலோமீட்டருக்கு மேல் தொலை தூரம் இயக்கப்படும் பேருந்துகள் 08 ஆகமொத்தம் பேருந்துகள் 232 என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

இதில் உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா, உதவி இயக்குநர் (பயிற்சி) கே.சாகித்யா, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக துணை மேலாளர் வெங்கடேசன், கிளை மேலாளர், தகுதி சான்று பிரிவு உதவி பொறியாளர், ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர்கள், பயணச் சீட்டு பரிசோதவர்கள், போக்குவரத்துக் கழக பணியாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மதுபாலன் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்.

# பயிர் கடனை 20ம் தேதிக்குள் தள்ளுபடி செய்யாவிட்டால் தலைமை செயலகத்தை முற்றுகையிடுவோம்: விவசாய சங்கம் அறிவிப்பு

திருச்சி: அக்.6–

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநிலத்தலைவர் அய்யாக்கண்ணு திருச்சியில் அளித்த பேட்டி: உச்ச நீதிமன்றம் மாதம் மாதம் தமிழகத்திற்கு குறிப்பிட்ட தண்ணீரை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. ஆனால் கர்நாடக அரசு அதனை கேட்க மறுக்கிறது. எனவே தமிழகத்தை தனி நாடாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

ஏற்கனவே குறுவை சாகுபடி முழுமையாக பொய்த்துள்ள நிலையில் தற்போது சம்பா சாகுபடியும் பல்வேறு இடங்களில் கேள்விக் குறியாக உள்ளது. விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் நிவாரணமாக ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாயை ஒன்றிய அரசு வழங்க வேண்டும். மாநில அரசு விவசாயிகள் பெற்றுள்ள கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். 60 வயதான விவசாயிகளுக்கு 500 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் அது எந்த வகையிலும் உதவிகரமாக இல்லை. எனவே ரூ.5,000 வழங்க வேண்டும். விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன்களை 20ம் தேதிக்குள் தள்ளுபடி செய்யாவிட்டால் சென்னை தலைமை செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# செஞ்சி கோட்டையில் தூய்மை இந்தியா தின விழா




விழுப்புரம் மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க செஞ்சிக்கோட்டையில் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் நாள் தூய்மை தினமாக கொண்டாடப்பட்டது. செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் ஏழுமலை தலைமையில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களும் செஞ்சி ரோட்டரி கிளப் நிர்வாகிகளும் இணைந்து செஞ்சி கோட்டையில் அமைந்துள்ள வீர ஆஞ்சநேயர் கோயில் வளாகம் வெங்கட்ரமணர் திருக்கோயில் வளாகம் மற்றும் கோட்டையின் உட்பகுதி ஆகியவற்றை சுத்தப்படுத்தி தூய்மை பணி மேற்கொண்டனர். இந்நிகழ்வு பொதுமக்களிடையே குப்பையை தொட்டியில் போடுவோம், முடிந்தவரை பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் , வீட்டைப்போல் நாட்டையும் தூய்மையாக காப்போம் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

# சென்னை எழும்பூரில் 500க்கும் மேற்பட்ட செவிலியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம்

சென்னை: செப்.6–

எழும்பூரில் 500க்கும் மேற்பட்ட செவிலியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே, தமிழ்நாடு இடைநிலை சுகாதார பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக 1,000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல தங்களுக்கும் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். விளையாட்டு உபகரணங்கள்

இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் என்ற பதவிப் பெயருக்குப் பதிலாக, சமூக சுகாதார அதிகாரி (Community Health Officer) என்ற பெயரை அதிகாரப்பூர்வமாக வழங்க வேண்டும் என்றும், இப்பெயரையே பணி நியமன ஆணையும் குறிப்பிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல, தமிழகத்திலும் ஊதியம் மற்றும் ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்."

பிற மாநிலங்களில் சி.எச்.ஓ.க்களுக்கு (CHO) சுமார் ரூ.4,000 முதல் ரூ.70,000 வரை ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, தங்களுக்கும் அதே அளவிலான ஊதியத்தை வழங்க வேண்டும் என்று அவர்கள் தொடர் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# உதயநிதி ஸ்டாலின் மீது வழக்குப்பதிவு

திருப்பூர்: அக்.6–

உதயநிதி ஸ்டாலின் மீது தாராபுரம் போலீசார் தேர்தல் வழக்கு பதிவு செய்து உள்ளனர். திருப்பூர் மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தாராபுரம் டவுன், பெரியார் சிலை அருகே நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின், குழந்தையை பேச வைத்ததாகவும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் குழந்தையை பயன்படுத்தியதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.தேர்தல் செய்திகள்

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் குழந்தைகளை ஈடுபடுத்தக்கூடாது என தேர்தல் ஆணையம் கடுமையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. இந்த விதிமுறையை மீறியதாக எழுந்த புகாரின் பேரில், உதயநிதி ஸ்டாலின் மீது தாராபுரம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்" என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக தாராபுரத்தில் தவெகவினர் குழந்தைகளை பிரசாரத்திற்கு பயன்படுத்தியது தொடர்பாக ஏராளமான புகார்களை மாற்றுக்கட்சியினர் ஆதாரங்களுடன் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பதில் காவல்துறை தீவிரம் காட்டுவதாக எதிர்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

# காலை உணவு திட்டத்தை கண்காணிக்க காலை 7 மணிக்கே ஆசிரியர்கள் வர வேண்டும் என்ற அறிவிப்பை திரும்ப பெற வேண்டும்: ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வலியுறுத்தல்

சென்னை: அக்.6–

பள்ளி காலை உணவுத் திட்டத்தைக் கண்காணிக்க தினம்தோறும் ஆசிரியர் ஒருவர் காலையில் 7 மணிக்கே பள்ளிக்கு வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. பல ஆசிரியர்கள் 40, 50 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து பணிக்கு வருகிறார்கள். காலை 7 மணிக்கே பள்ளிக்கு வருவது என்பது மிகவும் சிரமாக இருக்கும். பெரும்பாலான தொடக்கப்பள்ளிகளில் ஓர் ஆசிரியர் மற்றும் இரு ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் தினந்தோறும் 7 மணிக்கே பள்ளிக்கு வர வேண்டிய நிலை. இதனால், அவர்கள் வீட்டில் இருந்து ஐந்து மணிக்கு கிளம்பினால் தான் பள்ளிக்கு 7 மணிக்கு வர இயலும். எனவே கண்காணிப்பு பணிக்கு காலை 8.15 மணிக்கு வர அனுமதிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்புத் தலைவர் அருணன் கூறியுள்ளார்

# ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பும் கிறித்தவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல்

திருவள்ளூர் அக் 06 :

தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய 600 கிறித்தவர்கள் பயனடையும் வகையில் ஜெருலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பும் 550 கிறித்தவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.37,000 வீதமும், 50 கன்னியாஸ்திரிகள்,அருட்சகோதரிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.60,000 வீதமும் ணிசிஷி முறையில் நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பும் கிறித்தவ மத பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 31.01.2027க்குள் உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம். சேப்பாக்கம், சென்னை 600 005 என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி கேட்டறிந்தார்.

# இலங்கை கடற்படையினர் சிறைபிடித்த 9 மீனவர்களை விடுவிக்க கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம்!

ராமேஸ்வரம்: அக்.6–

இலங்கை கடற்படை சிறைபிடித்த ராமேஸ்வரம் மீனவர்கள் 9 பேரை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முதல் ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவித்துள்ளனர். போராட்டம் காரணமாக 600க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மீன் பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து 600க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் சனிக்கிழமை மீன்வளத் துறை அனுமதி பெற்று கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் கச்சத்தீவு நெடுந்தீவுக்கு இடையே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த புரோகர் என்பவரது விசைப் படகை பறிமுதல் செய்தனர். மேலும், இந்தப் படகிலிருந்த எபிஸ்டன் (29), மத்தியா (22), ஜான்ஜெய்சன் (25), ஸ்டிவன்சன் (23), சுபார்டன் (25), அபிஸ்ன் (27), மோபிஸ் (21), அந்தோணி பிரதீப் (26), அந்தோணி புருடஸ் (42) ஆகிய 9 மீனவர்களைக் கைது செய்தனர்.

9 மீனவர்கள் மீதும் எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக வழக்குப் பதிவு செய்து, இலங்கை ஊர்க்காவல்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி வருகின்ற அக்டோபர் 16ம் தேதி வரை சிறையில் காவலில் சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக ராமேஸ்வரம் மீனவர்கள் ஆலோசனை கூட்டம் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இலங்கை கடற்படை சிறைபிடித்த ராமேஸ்வரம் மீனவர்கள் 9 பேரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவித்துள்ளனர்.

மேலும், கடந்த காலங்களில் இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டு இலங்கை வசம் உள்ள 47 படகுகளுக்கு தமிழக அரசால் வழங்கக்கூடி நிவாரண தொகை வழங்கப்படவில்லை எனவே அத்தனையும் வழங்க வேண்டும் என்றும், 40 விசை படகுகளுக்கு மானிய டீசல் வழங்குவதை தமிழக அரசு நிறுத்தி வைத்துள்ளது அதனை மீண்டும் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ராமேஸ்வர மீனவர்கள் இந்த காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாகரசம்பட்டி அருகே கார் மரத்தில் மோதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு





கிருஷ்ணகிரி. அக்.6–

கிருஷ்ணகிரி மாவட்டம், நாகரசம்பட்டி காவல் சரகத்திற்கு உட்பட்ட அப்பு கொட்டாய் பகுதியில் நேற்று காலை கார் புளியமரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

பன்னிஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த எல்லப்ப கவுண்டர் மகன் அண்ணாதுரை (55), தனது மனைவி சங்கரி (50), மகள் பவித்ரா ஆகியோருடன் அண்ணாமலைபுதூரில் உள்ள மருமகன் வீட்டிற்கு காரில் சென்றுகொண்டிருந்தார். அப்பு கொட்டாய் பகுதியில் சென்றபோது அண்ணாதுரைக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு, கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த புளியமரத்தில் மோதியது.

விபத்தில் காயமடைந்த மூவரும் ஆம்புலன்ஸ் மூலம் போச்சம்பள்ளி எம்.கே. தனியார் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில் அண்ணாதுரை சிகிச்சை பலனின்றி காலை 10.15 மணியளவில் உயிரிழந்தார். சங்கரிக்கு தலையில் உட்காயமும், பவித்ராவுக்கு தலையில் ரத்தக்காயமும் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து நாகரசம் பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த அண்ணாதுரையின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வார விழாவினை 05–10–2026 முதல் 12–10–2026 வரை முன்னிட்டு பொதுமக்களிடையே தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஜெயந்தி, வட்டாட்சியர் மனிமொழி உட்பட பலர் உள்ளனர்.

# ஆவடி, திருவள்ளூர், ஊத்துக்கோட்டை ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு மருத்துவ சேவை கழக மேலாண்மை இயக்குநர் எஸ்.பி. அம்ரித், மாவட்ட ஆட்சியர் ச.கவிதா ஆகியோர் திடீர் ஆய்வு

திருவள்ளூர் அக் 06 :

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம், ஆவடி அரசு தலைமை மருத்துவமனையில் தமிழ்நாடு மருத்துவ சேவை கழக மேலாண்மை இயக்குநர் எஸ்.பி.அம்ரித் மற்றும் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா ஆகியோர் காய்ச்சல் பிரிவில் திடீர் ஆய்வு மேற்கொண்டு காய்ச்சலால் அனுமதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.



இந்த ஆய்வில், கொசு,புழு ஒழிப்பு பணியாளர்கள் பணியாளர்களின் களப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆவடி மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்தல் வாயிலாக கொசுக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டு, வைஷ்ணவி நகர் 2வது குறுக்குத் தெருவில் பதிவான நேர்மறை வழக்கு (Positive Case) பகுதி நேரில் பார்வையிடப்பட்டு, அப்பகுதியில் மேற்கொள்ளப் பட்டுள்ள டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் சரிபார்க்கப் பட்டன. மேலும், களப்பணியாளர்களின் பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்து, மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறுக்கு சரிபார்ப்பு செய்யப்பட்டது. ஆவடி அரசு மருத்துவமனையில் உள்ள காய்ச்சல் வார்டு, மருந்தகம், ஆய்வகம் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பிற மருத்துவ மற்றும் சுகாதார சேவைகள் குறித்தும் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, பெரியகுப்பம் ஜெ.என்.சாலை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் தமிழ்நாடு மருத்துவ சேவை கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் மருந்தகம் மற்றும் மருந்துகள் சேமிப்பு அறையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு மருத்துகளின் இருப்பு குறித்தும், அவற்றை பரிமரிக்கும் பதிவேடுகள் குறித்தும் கேட்டறிந்தும், காய்ச்சல் பிரிவில் காய்ச்சலால் அனுமதிக்கப்பட்டவர்களை பார்வையிட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும், பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் மருந்து மாத்திரைகளை தங்கு தடையின்றி வழங்க வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட மருத்துவ துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், ஊத்துக்கோட்டை வட்டம் கச்சூர் பகுதியில் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின் கீழ் இயங்கும் மாவட்ட மருத்து கிடங்கில் தமிழ்நாடு மருத்துவ சேவை கழக மேலாண்மை இயக்குநர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆகியோர் திடீர் ஆய்வு மேற்கொண்டு கிடங்கில் மருந்துகளின் இருப்பு குறித்தும், பல்லி, எலி உள்ளிட்டவைகளை கட்டுபடுத்தி கிடங்கினை சுகாதாரமாக வைத்திடவும், ஜெனரேட்டர், பளுதூக்கும் இயந்திரங்கள், தீயணைப்பான் உள்ளிட்டவைகளை முறையாக பராமரிக்க வேண்டுமெனவும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினர்.

இதில் ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா,அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் கோ. பாலாஜி, வட்டாட்சியர்கள் கண்ணன் (ஆவடி), சங்க மித்திரை (ஊத்துக்கோட்டை), மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் மருத்துவ துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பச்சிளம் குழந்தைகளை அரசியல் லாபத்திற்காக பகடைக்காயாக்குவதா?

# தேர்தல் பிரசாரத்தில் சிறுவனை பயன்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் செயலுக்கு கனிமொழி சந்தோஷ் எம்எல்ஏ கடும் கண்டனம்!

கோவை: அக்.6–

தேர்தல் அரசியலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பச்சிளம் குழந்தைகளையும் சிறுவர்களையும் அரசியல் பிரசாரத்தில் பயன்படுத்துவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேர்தல் பிரசாரத்தின் போது சிறுவன் ஒருவரை அரசியல் பிரசாரத்தில் ஈடுபடுத்தி, அரசியல் கருத்துகளை பேச வைத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீது காவல் துறை வழக்குப்பதிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் குழந்தைகளை பயன் படுத்தக் கூடாது என்ற விதிமுறைகள் தெளிவாக உள்ள நிலையில், ஒரு சிறுவனை அரசியல் பிரசாரத்திற்கு பயன்படுத்தியிருப்பது மிகுந்த வேதனையையும் கவலையையும் ஏற்படுத்துகிறது.

குழந்தைகள் அரசியல் ஆயுதங்கள் அல்ல; அவர்கள் அரசியல் லாபத்திற்காக பயன்படுத்தப்படும் பகடைக்காய்களும் அல்ல. அவர்களின் பிஞ்சு மனதையும், அறியாமையையும் அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்துவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

அரசியல் தலைவர்கள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டியது வெறுப்பையும் அரசியல் வன்மத்தையும் அல்ல; கல்வி, சமத்துவம், ஜனநாயகம் மற்றும் நல்லொழுக்கத்தையே.

ஒரு அரசியல் வாதியின் உண்மையான கடமை, குழந்தைகளின் கையில் புத்தகத்தை கொடுப்பதே!

குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்தை பாதுகாப்பது தான் அரசியலின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். அரசியல் ஆதாயத்திற்காக குழந்தைகளை பயன்படுத்தும் போக்கு இனியாவது முற்றுப்பெற வேண்டும்.இவ்வாறு கனிமொழி சந்தோஷ் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வால் மக்கள் பாதிப்பு விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை:

## தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வலியுறுத்தல்

சென்னை: அக்.6–

பொருட்கள் விலை உயர்வால் மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்க விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வலியுறுத்தியுள்ளது. தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் பொதுச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் நேற்று வெளியிட்ட அறிக்கை: மத்தியப் பிரதேச மாநிலம் உஜ்ஜைன் நகரில், சாத்ரி சவ்க் பகுதியில் 636 ஆண்டுகள் பழமையான ஷாஹி பள்ளிவாசலின் ஒரு பகுதி.

2028 கும்பமேளாவை முன்னிட்டு சாலை விரிவாக்கப் பணிகளுக்காக அகற்றப் பட்டுள்ள சம்பவம் வருத்தத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மாற்று சாலை அமைக்கும் வாய்ப்புகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டனவா?. அனைத்து மதங்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும் ஒரே அளவுகோல் பயன்படுத்தப்பட்டதா?. மக்களின் மத உணர்வுகளைக் கருத்தில் கொண்டு அமைதியான தீர்வை உருவாக்க போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டனவா?.

என்ற கேள்விகள் இந்திய முஸ்லிம் சமூகத்திடம் உள்ளது. இந்த நடவடிக்கைகள் குறித்து வெளிப் படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். காவல்துறையால் கைது செய்யப்பட்ட பொது மக்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டு, அதற்குக் காரணமான அதிகாரிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். உஜ்ஜைனில் நிலவும் பதற்றத்தைத் தணிக்க அனைத்து சமூகத் தலைவர்கள் மற்றும் பொது மக்களுடன் அரசு நிர்வாகம் உடனடி அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.இந்திய பொருளாதாரம்

தண்ணீர் பஞ்சம் ஏற்படக்கூடிய ஒரு சூழல் தமிழகத்தில் இருக்கக்கூடிய நேரத்தில் அதை தடுப்பதற்கான பெரிய முயற்சிகளை தவெக அரசாங்கம் எடுத்ததாக தெரியவில்லை. மேலும் வணிக சிலிண்டர்களினுடைய விலை மீண்டும் உயர்த்தப்பட்டு உள்ளது. மேலும் பெரும்பான்மையான பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளதால் சாதாரண ஏழை எளிய மக்கள் பெரும் துயரை அனுபவிக்கின்றனர். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த ஒன்றிய மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தவெக வேட்பாளர்கள் மீது தேர்தல் ஆணையத்தில் அவசர புகார்: இடைத்தேர்தல் விதிமீறல் குற்றச்சாட்டு!

மதுரை: அக்.6–

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நாளை நடைபெற உள்ள நிலையில், தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் மீது தேர்தல் ஆணையத்தில் அவசர புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

மேலூரைச் சேர்ந்த உயர் நீதிமன்ற வழக்கறிஞர் அமலன், தமிழக தேர்தல் ஆணையத்திற்கு இந்த மனுவை அளித்துள்ளார். அப்புகாரில், தாராபுரம் மற்றும் மதுராந்தகம் இடைத்தேர்தல் பகுதிகளில் தவெக தலைவர் விஜய் அவர்களின் இரண்டு நாள் பிரச்சாரத்திற்காக சாலைகளின் இருபுறமும் சேர்த்து சுமார் 80 கிலோமீட்டர் தொலைவிற்கு பேரிக்காடுகள் அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, மிக உயரமான கொடிக்கம்பங்கள் நடப்பட்டிருப்பதும், பல்வேறு ஊர்களில் இருந்து லாரிகள் மற்றும் இதர வாகனங்கள் மூலம் ஆட்கள் வரவழைக்கப்பட்டுள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் நிர்ணயித்த செலவு வரம்பை மீறி, பேரிக்காடுகள், தரை, தப்பட்டை மற்றும் வரவேற்பு ஏற்பாடுகளுக்காக மட்டும் பல கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தேர்தல் ஆணையத்தின் வீடியோ குழுக்கள் மூலம் இந்த பதிவுகளை முழுமையாக ஆய்வு செய்து, இந்த செலவுகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட இரண்டு வேட்பாளர்களின் தேர்தல் செலவு கணக்கில் சரியாக சேர்க்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், விதிகளை மீறி அதிகப்படியாக செலவு செய்துள்ள இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தேர்தலில் போட்டியிடுவதை தடை செய்ய வேண்டும் என்றும் அந்த மனுவில் அவசரமாக கோரப்பட்டுள்ளது.

# சென்னையிலிருந்து மதுரை நோக்கி சென்ற தனியார் ஆம்னி பேருந்து உளுந்தூர்பேட்டை அருகே சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து!

உளுந்தூர்பேட்டை: சென்னையிலிருந்து தனியார் ஆம்னி பேருந்து, 35க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு மதுரை நோக்கிச் சென்ற கொண்டிருந்த நிலையில், இன்று அதிகாலை உளுந்தூர்பேட்டை அருகே சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்று அதிகாலை உளுந்தூர்பேட்டையை அடுத்த பாதூர் அருகே பேருந்து சென்று கொண்டிருந்தபோது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 30க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருநாவலூர் காவல் நிலைய போலீசார் மற்றும் போக்குவரத்துக்கு போலீசார் விபத்தில் படுகாயமடைந்தவர்களை மீட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தின் காரணமாக அதிகாலையில் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான பேருந்தை கிரேன் மூலம் அப்புறப்படுத்தும் பணியில் போலீசார் ஈடுபட்டனர். இந்த விபத்து குறித்து திருநாவலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆந்திராவில் இருந்து ரூ.25 லட்சம் மதிப்பிலான கஞ்சாவைக் கடத்தி வந்த 5 பேர் திருச்சியில் கைது

திருச்சி: அக்.6–

ஆந்திராவில் இருந்து தமிழ்நாட்டிற்கு கருவாடு லோடு ஏற்றிவந்த லாரியில், ரூ.25 லட்சம் மதிப்பிலான கஞ்சாவைக் கடத்தி வந்த 5 பேர் சமயபுரத்தில் கைது செய்தனர். திருச்சி சென்னை தேசிய நெடுஞ் சாலையில் வாகன சோதனையில் போலீசார் ஈடுபட்டபோது, ஜோயல் (24), அரவிந்த் (31), காமராஜ் (29), ஒண்டிமுத்துகுமார் (46), இதயபாலன் (33) ஆகியோர் பிடிபட்டனர்



சேலம் மாவட்ட ஆட்சியரத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் மாவட்ட மாற்றுத்தினாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி, துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி திவ்யா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான மாவட்ட உயர்மட்டக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் பெற்றுக் கொண்டார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் ராஜசேகர், துணை ஆட்சியர் (பயிற்சி) ஹரிஷ் உட்பட பலர் உள்ளனர்.

# கோவையில் நவீன வசதிகளுடன் கூடிய அவேரா இருதய மருத்துவமனை தொடக்கம்

கோவை அக்.06

கோவை துடியலூரில் உலகத்தரம் வாய்ந்த அதிநவீன வசதிகளுடன் கூடிய பிரத்யேக இருதய சிகிச்சை மையமான அவேரா இருதய மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது.முழுமையான இதயப் பராமரிப்புக்கான ஒரு மருத்துவ மையத்தை உருவாக்க வேண்டும் என்ற பிரபல மருத்துவ நிபுணர்களான டாக்டர் ராஜ்பால் கே. அபைசந்த் மற்றும் டாக்டர் சந்திரசேகர் பத்மநாபன் ஆகியோரின் 30 ஆண்டுகால கனவு இம் மருத்துவமனையின் மூலம் நனவாகியுள்ளது.




துடியலூரில் உள்ள ஸ்ரீ லட்சுமி நாராயணன் மஹாலில் நடைபெற்ற தொடக்கவிழாவில் ,பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் தலைமை விருந்தினராகப் பங்கேற்று மருத்துவமனையைத் திறந்து வைத்தார்.இவ்விழாவில் சங்கரா கண் அறக்கட்டளையின் நிறுவனரும் நிர்வாக அறங்காவலருமான டாக்டர் ஆர்.வி.ரமணி, பிரிகால் லிமிடெட் நிறுவனர் விஜய் மோகன், வி.எல்.பி அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா கல்விக் குழுமத்தின் நிர்வாக அறங்காவலர் . மலர்விழி,பின்னணிப் பாடகி சுஜாதா மோகன்,மேயோ கிளினிக்கின் கௌரவப் பேராசிரியர் டாக்டர் சந்திரசேகர் கே ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

மேலும் ஸ்ரீ கோவை குஜராத்தி சமாஜத்தின் தலைவர் பிரவேஷ் ஜேத்மால் மற்றும் ராஜஸ்தானி சங்கத்தின் தலைவர் சந்தோஷ் முந்த்ரா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றனர்.

இதயப் பராமரிப்பு மற்றும் தீவிர சிகிச்சைக்கு முக்கியத்துவம் அளித்து 100 படுக்கைகளுடன் இந்த மருத்துவமனை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு பிலிப்ஸ் அஸுரியன் 7 சீரிஸ் கேத் லேப்கள்,2 உலகத்தரம் வாய்ந்த கெட்டிங்ஸே மாடுலர் அறுவை சிகிச்சை அரங்குகள்,18 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் 16 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்புப் பிரிவு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய பிலிப்ஸ் இன்கிசிவ் கார்டியாக் சி.டி. வசதியும் இங்கு நிறுவப்பட்டுள்ளது.

இருதயவியல்,இருதயமார்பக அறுவை சிகிச்சை,அவசர சிகிச்சை,மயக்கவியல்,தீவிர சிகிச்சை,நுரையீரல் மற்றும் கதிரியக்கவியல் துறைகளுடன் இணைந்து சிறுநீரகவியல், நரம்பியல்,நாளமில்லாச் சுரப்பியல் உள்ளிட்ட கூடுதல் சிறப்புப் பிரிவுகளும் இங்கு இயங்கும். இவற்றுடன் 24 மணி நேர ஆம்புலன்ஸ் சேவை,மருந்தகம் மற்றும் மேம்பட்ட சி.எஸ்.எஸ்.டி வசதிகளும் நோயாளிகளின் பயன்பாட்டிற்காகத் தயார் நிலையில் உள்ளன.

மருத்துவமனையின் தலைவரான டாக்டர் ராஜ்பால் கே. அபைசந்த்,30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமும்,45,000க்கும் மேற்பட்ட இருதய சிகிச்சைகளை மேற்கொண்ட அனுபவமும் கொண்டவர்.அதேபோல் தலைமை இருதய மார்பக அறுவை சிகிச்சை நிபுணரும் இயக்குநருமான டாக்டர் சந்திரசேகர் பத்மநாபன்,34 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் 10,000க்கும் அதிகமான இருதய அறுவை சிகிச்சைகளையும்,துடிக்கும் இதய அறுவை சிகிச்சை மற்றும் ரோபோடிக் இதய சிகிச்சைகளையும் வெற்றிகரமாகச் செய்த சர்வதேச அனுபவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



விழுப்புரம் டாக்டர் எம்ஜிஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு தயாரிப்புகளின் விற்பனைக் கண்காட்சி கல்லூரி சந்தையின் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் திட்ட இயக்குனர் (மகளிர் திட்டம்), சுந்தர்ராஜன், துணை ஆட்சியர் (பயிற்சி) ஹரிஷ் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்டம் மயிலாடி பகுதியில் செயல்பட்டு வரும் கல்குவாரி மற்றும் தார் பிளாண்ட் ஆலைகள்.. பொதுமக்கள் கடும் பாதிப்பு அடைவதாக ஆட்சியரிடம் மயிலாடி இளம் தளிர் நற்பணி மன்றத்தினர் புகார் மனு..

ஈரோடு. அக். 06

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ள முருங்கத்தொழுவு அடுத்துள்ள மயிலாடி கிராமத்தில் செயல்பட்டு வரும் கண்ணன் ப்ளூ மெட்டல்ஸ் மற்றும் கே எம் ஆர் தார் பிராண்ட் ஆகிய நிறுவனங்களால் மயிலாடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு, கடும் உடல் உபாதைகளும் ஏற்படுவதாக குற்றச்சாட்டை இழந்துள்ளது.



இந்தக் கண்ணன் ப்ளூ மெட்டல் மற்றும் கே எம் ஆர் தார் பிளாண்ட் ஆகிய நிறுவனங்கள் சட்ட விரோதமாகவும், உரிய சுற்றுச் சூழல் அனுமதி பெறாமலும் செயல்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

இது குறித்து இந்த நிறுவனத்தால் கடும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள மயிலாடி பகுதி பொதுமக்கள் சார்பில், மயிலாடி இளம் தளிர் நற்பணி மன்றம் சார்பில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இந்த நிறுவனத்தின் மீது அடுக்கடுக்காக பல்வேறு குற்றச்சாட்டுகளை புகார் மனுவில் தெரிவித்துள்ளனர்.

அதில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ள முருகன் தொழுவு பகுதியில் தனியாருக்கு சொந்தமான கண்ணன் ப்ளூ மெட்டல் என்ற நிறுவனமும் கே எம் ஆர் ஸ்டார் ப்ளாண்ட் என்ற நிறுவனமும் செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனங்கள் ஒரு தனி நபருக்கு சொந்தமானது. இந்த ஆலைகளின் மூலம் சட்ட விரோதமாக செயல்பட்டு கோடிக்கணக்கில் லாபம் சம்பாதித்து வருகின்றனர்.

இந்த கல்குவாரி மற்றும் ஸ்டார் ப்ளான் ஆகியவை தமிழ்நாடு சுற்றுச்சூழல் அலுவலகத்தின் விதிமுறைகளை மீறி சட்டவிரோதமாக செயல்படுகிறது.

அரசின் எந்த ஒரு முறையான உரிய ஆவணங்களையும் சரிவர வைத்திருக்காமல் தங்களின் பண செல்வாக்கால் இந்த நிறுவனங்களை இரவு பகலாக இயக்கி வருகின்றனர்.

இந்தக் கண்ணன் கல்குவாரியில் பாறைகளை உடைக்க பயன்படுத்தப்படும் வெடிகள் மிகவும் சக்தி வாய்ந்ததாகவும், சட்டவிரோதமான முறையிலும் வெடிக்க வைக்கப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். நேரம் அதிக சத்தத்துடன் வெடித்து சிதறும் வெடி சத்தத்தால் அப்பகுதியில் வசிக்கும் சிறுவர்களும், முதியவர்களும், பொதுமக்களும் கடும் பாதிப்புகள் ஆளாகி தங்களின் கேட்கும் செவித்திறனையும் இழந்து வருகின்றனர்.

அதேபோல் அந்தப் பகுதி கிராமங்களில் இருக்கும் ஆடு மாடு போன்ற கால்நடைகளும் இந்த வெடி சத்தத்தால் மிகவும் பாதிப்பு அடைகின்றது.

மேலும் இந்த நிறுவனத்தில் செயல்பட்டு வரும் கனரக வாகனங்கள் பெருந்துறை, சென்னிமலை சாலைகளில் அதிக பாரம் ஏற்றி கொண்டு அதிவேகமாக செல்வதால் சாலைகள் முற்றிலும் சேதம் அடைவதோடு, அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகிறது.

அதோடு அதிகப்படியான மின் நுகர்வால் இப்பகுதியில் உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு போதிய மின்சாரம் கிடைப்பதில்லை.

மாவட்ட கனிம வள அலுவலகத்தில் பெறப்பட்டுள்ள, அனுமதி தாண்டி அதிக அளவு கற்களை இந்த நிறுவனம் வெட்டி எடுத்து விற்பனை செய்து வருகிறது.

அதோடு இந்த கண்ணன் ப்ளூ மெட்டல் நிறுவனத்திற்கு சொந்தமான கே எம் ஆர் தார் பிளாண்ட் சட்ட விதிகளை மீறி செயல்பட்டு வந்ததின் காரணத்தால் அந்த தார் பிளாண்ட் அதிகாரிகளால் மூடப்பட்டது.

இருப்பினும் மீண்டும் சட்ட விரோதமாக அந்த கே எம் ஆர் தார் பிளாண்ட் செயல்பட்டு வருகிறது.

இந்த தார் பிளாண்ட் செயல்படுவதால் அப்பகுதியில் உள்ள கிராமங்களில் கடும் துர்நாற்றம் வீசுவதோடு நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டு பொதுமக்கள் பாதிப்பு அடைந்து வருகின்றனர்.

இது குறித்து கிராம சபை கூட்டங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனவே மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து மயிலாடி பகுதி பொதுமக்களின் நலனை பாதுகாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மயிலாடி இளம் தளிர் நற்பணி மன்றம் சார்பில் ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி இடம் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

# தாராபுரம் இடைத்தேர்தல்: வாக்கு எண்ணும் மையத்தில் மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு!



திருப்பூர்: அக்.6–

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் நாளை இடைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரசு கலை கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான நர்ணாவரே மனிஷ் சங்கர்ராவ் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.தேர்தல் செய்திகள்

தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் நாளைய தினம் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. குறிப்பாக 320 வாக்குச்சாவடி மையங்களில் வாக்கு பதிவானது நடைபெற்ற உள்ளது. இதில் 18 வாக்குச்சாடிகள் பதட்டமான வாக்குச்சாவடியாக கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் 3500க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இந்நிலையில், வாக்குப்பதிவு நடைபெற்ற பிறகு வாக்கு பதிவு செய்யப்பட்ட பெட்டிகளை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள எல்ஆர்ஜி அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் வைக்கப்பட உள்ளது.

பின்னர் அக்டோபர் 9ம் தேதி வாக்குப்பதிவு எண்ணிக்கை நடைபெற்ற உள்ள நிலையில் முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான நர்ணாவரே மனிஷ் சங்கர்ராவ் ஐ.ஏ.எஸ் இன்று காலை ஆய்வு செய்தார்.மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகர காவல் துணை ஆணையர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் ஆய்வு பணி மேற்கொண்டனர்.

# 'வெற்றி பயணம்' திட்டத்துக்கு தடை விதிக்க ஐகோர்ட் மறுப்பு: வழக்கு தள்ளுபடி

சென்னை: அக்.6–

தமிழகம் முழுவதும் அரசுப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் 'வெற்றி பயணம்' திட்டத்திற்கு தடை கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

அரசுப் பேருந்துகளில் தமிழகம் முழுவதும் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் 'வெற்றி பயணம்' திட்டத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் வேலைக்கு செல்லும் பெண்கள், கல்லூரி மாணவிகள், வயதானவர்கள் உள்ளிட்டோர் பயன் பெறும் வகையில் செயல்படுத்தி வந்த விடியல் பயண திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 'வெற்றி பயண திட்டம்' என்ற பெயரில் அக்டோபர் 2ம் தேதி தமிழக முதல்வர் விஜய் துவக்கி வைத்தார்.

இந்நிலையில், தவெக தலைமையில் ஆட்சி அமைந்த பின், தமிழகம் முழுவதும் இயங்கும் 12 ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்ய வகை செய்யும், நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வெற்றி பயண திட்டத்தை எதிர்த்து ஈரோட்டைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர் கலாமணி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அதில், "வெற்றி பயண திட்டம் காரணமாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் வருவாய் இழப்பை சந்தித்து, தொழிலை கைவிட வேண்டிய சூழல் உருவாகும் எனவும், பெண் பயணிகளிடம் கட்டணம் வசூலிக்காமல் இருப்பது அரசியல் சட்டத்தின் சம உரிமையை மீறும் செயல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி பயண திட்ட பயனாளிகளுக்கான கட்டணமாக, ஆண்டுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாயை அரசே ஏற்றுக் கொண்ட நிலையில், இதேபோல இழப்பீடு வழங்கி, தனியார் பேருந்துகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற தனியார் பேருந்து உரிமையாளர்கள் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை அரசு ஏற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் முதல்வரின் அறிவிப்பு அடிப்படையில் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் தொடர்பாக எந்த அரசாணையும் பிறப்பிக்கப்படவில்லை என்பதால், இந்த திட்டத்தை அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என அறிவிக்க வேண்டும்" என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கு முடியும் வரை, வெற்றி பயண திட்டத்துக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்" எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பழனி, எந்த அரசாணையும் இல்லாமல் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதனால், அரசாணை இந்த வழக்கில் முக்கியம் இல்லை என்பதால், அதை எதிர்த்து வழக்கு தொடரவில்லை" என தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், "வெற்றி பயணத் திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த தடை விதிக்க முடியாது. ஒரு மாவட்டத்தில் செயல்படும் தனியார் போக்குவரத்து சங்கம் எந்த அடிப்படையில் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு தடை கோர முடியும்.

அக்.02ம் தேதி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையை எதிர்த்து மனுதாரர் வழக்கு தொடரலாம். அதிலும், தங்களது மாவட்டத்திற்கு மட்டும் திட்டத்தை செயல்படுத்த தடை கோர மனுதாரருக்கு உரிமை உள்ளது" என நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, மனுவை திரும்பப் பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்ற நீதிபதிகள், மனுவை திரும்பப்பெற மனுதாரரை அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# திருவள்ளூர் அடுத்த மேட்டுப்பாளையம் கிராமத்தில் குடிநீர் வராததை கண்டித்து அரசு பேருந்தை சிறைபிடித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்



திருவள்ளூர் அக் 06 :

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியம் சென்றான்பாளையம் ஊராட்சி மேட்டுப்பாளையம் கிராமத்தில் 150க்கும் மேற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த 6 மாதமாக குடிநீர் முறையாக விநியோகம் செய்யவில்லை என கூறப்படுகிறது. இதனால் தண்ணீர் டேங்கர் லாரி மூலம் வரவழைத்து ஒரு குடம் ரூ.10க்கு வாங்கி பயன்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் கூலித் தொழில் செய்து பிழைப்பு நடத்தி வரும் தங்களால் தினமும் பணம் கொடுத்து குடிநீர் வாங்க முடியாத சூழ்நிலை இருப்பதால் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர், திருவள்ளூர் சட்டமன்ற தவெக உறுப்பினர் உள்ளிட்ட பலரிடமும் கோரிக்கை மனுவும் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது.

இதனையடுத்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குடிநீர் பிரச்சனை காரணமாக மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருவதால் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி திருவள்ளூர் ராமஞ்சேரி சாலை மேட்டுப்பாளையத்தில் அவ்வழியாக சென்ற அரசுப் பேருந்துகளை சிறை பிடித்து காலி குடங்களுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் வரபிரசாத் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து 10 நாட்களுக்குள் குடிநீர் விநியோகம் சீராக செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார். இதனையடுத்து சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு பொது மக்கள் கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் அரசுப் பேருந்தில் பயணம் செய்தவர்கள், வேலைக்கு செல்லும் பேருந்தில் இருந்த தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421, 9750589992